திரு. எஸ். அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி சட்டமன்றத் தொகுதி, வரலாற்றுச் சிறப்புமிக்க தொகுதி. அந்தத் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனை என் தந்தையார், பாட்டனார் காலத்தில் இருந்தே செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனை நோயாளிகளால் நிரம்பி வழியும்* busy *ஆன மருத்துவமனை. இந்த மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும். ஏனென்று சொன்னால், தலைவரின் பொற்கால ஆட்சியில், வந்தவாசி அருகிலுள்ள செய்யாறு சிப்காட்டிற்கு பல்லாயிரம் தொழிலாளர்கள் இருசக்கர வாகனத்தில் சென்று வருகிறார்கள். மேலும், மேல்மருவத்தூருக்கு கர்நாடகாவிலிருந்து பல பக்தர்கள் வருகிறார்கள். அதுமட்டுமல்ல, இப்போது அத்திவரதர் கோயிலுக்கு வந்தவாசி வழியாகத்தான் வருகிறார்கள். அதனால் அங்கு பல விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்த அரசு பொது மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

(அஏ) கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்குதல் மற்றும் சர்க்கரை ஆலைகளை இயக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை யூனிட்–1, மூங்கில்துறைப்பட்டு கரும்பு விவசாயிகளுக்குச் சேரவேண்டிய அரசு அறிவித்த, ஆதார விலை, 2015–2016 மற்றும் 2016–2017 ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகை சுமார் ரூ.30 கோடி வழங்கப்படாமல் உள்ளது. மேலும், இந்த ஆண்டு கடும் வறட்சியின் காரணமாக, கரும்பு பயிர்கள் எல்லாம் காய்ந்துபோன நிலையில் உள்ளன. எங்கள் மாவட்டத்திலே மூன்று கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அந்த மூன்று கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ஏதாவது ஒரு சர்க்கரை ஆலையை இயக்கினால், உடனடியாக இந்தக் கரும்புகள் வெட்டப்பட்டு, விவசாயிகளின் பிரச்சினைகள் தீரும் என்பதைச் சொல்லி, அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.*